# பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசின் ஓய்வூதியதாரர்களுக்கும் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் காஞ்சிபுரம் மாவட்டக் கருவூலம் மற்றும் சார் கருவூலங்களில் 2018-ம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்காணல் ஏப்ரல் 2018 முதல் நடைபெற்று வருகின்றன.

இதுநாள் வரையில் நேர்காணலில் பங்குபெறாத ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஜூன் மாதத்திற்குள் அருகிலுள்ள கருவூல அலுவலகங்களுக்கு ஓய்வூதிய புத்தகம், வங்கி கணக்கு புத்தகம், ஆதார் எண் ஆகிய விவரங்களுடன் நேரில் வருகை புரிந்தோ அல்லது உயிர்வாழ் சான்றினை சமர்ப்பித்தோ ஓய்வூதியதாரர்கள் தங்களின் நேர்காணலை நிறைவு செய்து கொள்ளலாம். மேலும் **e-சேவை மையங்கள் மூலம் ஜீவன் பிரமான் போர்டலில்** (JeevanPramaan Portal) மின்னனு உயிர்வாழ் சான்றினை (Digitial Life Certificate) பெறுவதன் மூலமாகவும் பதிவு செய்துக் கொள்ளலாம்.

இன்னும் 15 நாட்களே உள்ள நிலையில் மேற்காணும் வழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் இவ்வாண்டிற்கான நேர்காணலை விரைந்து முடித்துக் கொள்ளுமாறும் ஓய்வூதியம் நிறுத்தம் என்ற கடினமான நடவடிக்கையிலிருந்து விடுத்து, நேர்காணலில் பங்குப் பெற்று ஓய்வூதியர்களின் நலனை தொடர்ந்து காத்திட மாவட்டக் கருவூலத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு வரும் நிலையில் ஓய்வூதியப் புத்தகம், புகைப்படம், ஆதார் அட்டைகளுடன் e-சேவா மையங்களை அணுகி ரூ.30/- கட்டணம் செலுத்தி அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/
மாவட்டஆட்சித் தலைவர்,
காஞ்சிபுரம்.

கூடுதல் கருவூல அலுவலர்
காஞ்சிபுரம்.